# கொழும்பில் நேற்றும் பாதுகாப்பு படையால் 1,500 தமிழர் கைது!


விலை ரூபா 5.00

ஈழநாடு

EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 37 திருவள்ளுவர் ஆண்டு 2026 சித்திரை 12 இதழ் 80

யாழ்ப்பாணம் செவ்வாய்க்கிழமை 25 - 4 - 1995


(கொழும்பு)

கொழும்பில் நேற்றும் 1500க்கும் மேற்பட்ட தமிழர் கைது செய்யப்பட்டுள்ளதாக அங்கிருந்துவரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

கொழும்பிலுள்ள தமிழர்களை கைது செய்யும் நடவடிக்கையில் பொலிஸாரும் இராணுவத்தினரும் தீவிரமாக நேற்றும் ஈடுபட்டனர். இவர்கள், தமிழர்களை வீடுகளிலும், வீதிகளிலும் வைத்து ஆண். பெண் என்ற பேதமின்றி பெருமளவில்

(6ம் பக்கம் பார்க்க)

## கட்டுமுறிவுமுகாம் தகர்ப்பில் ஹெலியும் சேதம்

### ஐலண்ட் தகவல்

(கொழும்பு)

கட்டுமுறிவு முகாம் தகர்ப்பின்போது விமானப் படை ஹெலிகொப்டர் ஒன்று புலிகளின் தாக்குதலுக்கு இலக்காகி சேதமடைந்ததாக புலிகள் தெரிவிப்பதாக 'ஐலண்ட்' பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

கட்டுமுறிவு படைமுகாம் மீதான தாக்குதலின்போது மேலதிக படையினரை இம்முகாமிற்கருகில் தரையிறக்க முற்பட்டபோது விடுதலைப்புலிகள் ஹெலிகொப்டர் மீது கடும் எதிர்தாக்குதலை மேற்கொண்டிருந்தனர்.

இதன்போதே ஹெலிகொப்டர் சேதமடைந்ததாக அச்செய்தியில் தெரிவிக்கப்படுகிறது. சி-இ

# புக்காரா - ஹெலிகள் பாதுகாப்புடன் முன்னேற முயன்ற ராணுவத்தை புலிகள் தாக்கி முகாம் திருப்பினர்

## - அச்சுவேலிப் பகுதியில் நேற்று கடும் சமர் -

(யாழ்ப்பாணம்)

**பலாலி இராணுவ முகாமிலிருந்து நேற்று அதிகாலை புக்காரா. மற்றும் ஹெலிகொப்டர்களின் பாதுகாப்புடன் அச்சுவேலி நோக்கி முன்னேற முயன்ற ஸ்ரீலங்கா இராணுவத்தினர் விடுதலைப் புலிகளின் உக்கிர தாக்குதலினால் தமது முன்னேறும் முயற்சியை கைவிட்டு முகாம் திரும்பினர். நேற்று இந்தப் பகுதியில் புலிகளுக்கும் படையினருக்கும் இடையில் கடும் சமர் நடந்தது-**

நேற்று அதிகாலை மேற்கொள்ளப்பட்ட இவ் இராணுவ நடவடிக்கையின்போது இருதரப்பிலும் பலத்த துப்பாக்கி மோதல் நீண்ட நேரமாக இடம்பெற்றது.

இச்சமயத்தில் ஹெலிகொப்டர். மற்றும் புக்கார விமானங்கள் தாக்குதலை நடத்தி படையினருக்கு பலத்த பாதுகாப்பை வழங்கின.

இம்மோதலில் விடுதலைப் புலிகள் தரப்பில் எதுவித சேதமும் ஏற்படவில்லையென்பது இங்கு குறிப்பிடத்தக்கது. (க-51-160-இ)

## வீடுகள் சேதம்

(யாழ்ப்பாணம்)

நேற்றைய ஷெல் தாக்குதலால் அச்சுவேலிப் பகுதியை சேர்ந்த செல்லர் தர்மகுலசிங்கம் என்பவருடைய வீடு பலத்த சேதமடைந்தது.

தி. மாணிக்கம் என்பவருடைய வீட்டின் முன்பகுதியில் வீழ்ந்து வெடித்த ஷெல்லினால்

(6ம் பக்கம் பார்க்க)

## புக்காரா, ஹெலி கடும் தாக்குதல்

(யாழ்ப்பாணம்)

அச்சுவேலி, தம்பாலை, வல்லைப்பாலத்தை அண்டிய பகுதிகளில் நேற்று புக்கார விமானங்கள் கடும் விமான தாக்குதலை நடாத்தியுள்ளன.

நேற்றுக் காலை முதல் நண்பகல் வரை நடைபெற்ற இத் தாக்குதலினால் இப்பகுதியினூடான போக்குவரத்துக்கள் யாவும் பலமணி நேரம் ஸ்தம்பிதமடைந்தன.

வல்லைப் பாலத்திற்கு அருகில் கல் உடைக்கும் தொழிற்சாலைக்கு அருகிலேயே மேற்படி விமானத் தாக்குதல் இடம் பெற்றது.

(6ம் பக்கம் பார்க்க)

## வல்லை வீதியில் லொறி மீது புக்காரா தாக்குதல்

(நெல்லியடி)

வல்லை வீதியில் சென்ற லொறி மீது புக்காரா விமானம் ஒன்று 50 கலிபர் தாக்குதலை மேற்கொண்டது. இதனால் திடீரென லொறியை வீதியோரம நிறுத்திய சாரதியும். நடத்துனரும், அருகிலுள்ள ஆலய கிணற்றுள் வீழ்ந்து உயிர்தப்பினர்கள். லொறிக்கு சேதம எதுவும் ஏற்படவில்லை.

இச்சம்பவம் நேற்றுக்காலை 7 மணியளவில் வல்லை முனியப்பர் ஆலயத்திற்கு அருகில்

(6ம பக்கம் பார்க்க)

## ஷெல் தாக்கு; மக்கள் இடம்பெயர்வு

(யாழ்ப்பாணம்)

பலாலி இராணுவ முகாமிலிருந்து அச்சுவேலி, தம்பாலை, வளலாய், கதிரிப்பாய் போன்ற பகுதிகள்மீது நேற்று காலை மேற்கொள்ளப்பட்ட அகோர ஷெல் தாக்குதலையடுத்து பெருமளவு மக்கள் இடம்பெயர்ந்துள்ளனர்.

நேற்று காலை முதல் நண்பகல்வரை மக்கள் குடியிருப்புகளை இலக்காக வைத்து நடத்தப்பட்ட தாக்குதலையடுத்தே மக்கள் பதற்றமடைந்து பெருமளவில் வெளியேறினர்.

இடம்பெயர்ந்த மக்கள் புத்தூர், ஆரங்கால், சிறுப்பிட்டி, நீர்வேலி போன்ற

(5ம் பக்கம் பார்க்க)

## புலிகள் தாக்குதலில் சிப்பாய் பலி

(கொழும்பு)

வடபகுதியில் மட்டுப்படுத்தப்பட்ட இராணுவ நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டிருப்பதாக இராணுவ வட்டாரங்கள் நேற்றுத் தெரிவித்தன.

நேற்று வடபகுதியில் மேற்கொள்ளப்பட்ட இந்த நடவடிக்கையின்போது விடுதலைப் புலிகளின் தாக்குதலினால்இராணுவச் சிப்பாய் ஒருவர் கொல்லப்பட்டதாகவும், மற்றொரு சிப்பாய் காயமடைந்ததாகவும் அவ்வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

அச்சுவேலி, இடைக்காடு போன்ற பகுதிகளில் தாக்குதல் இடம் பெற்றதாகவும் பாதுகாப்பு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். க இ

## சமாதானக் கதவை நாம் ஒரேயடியாக மூடிவிடவில்லை - லண்டனில் புலிகள் அறிக்கை

(கொழும்பு)

"சமாதானத்துக்கான கதவை நாம் ஒரேயடியாக மூடிவிடவில்லை. ஆனால் அமைதிக்கான புதிய முன்னெடுப்புக்களை அரசே முன்வைக்க வேண்டும்."

இவ்வாறு விடுதலைப் புலிகளின் சர்வதேச செயலகம் நேற்று லண்டனில் வெளியிட்ட

(6ம் பக்கம் பார்க்க)

## காங்கேசன்துறை மீது புலிகள் தாக்குதல்

(கொழும்பு)

விடுதலைப் புலிகள் நேற்று முன்தினம் இரவு காங்கேசன்துறை பகுதிமீது மோட்டார் குண்டுகள் மூலம் தாக்குதல் நடத்தியதாக பாதுகாப்புத்துறை பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

இந்தத் தாக்குதலின்போது பாதுகாப்புப் படையினருக்கு எவ்வித சேதமும் ஏற்படவில்லையெனவும் மேலும் தெரிவிக்கப்பட்டது. இ

## மீனவர்கள் மீது கடற்படை தாக்குதல் மூன்று மீனவரைக் காணவில்லை

### வல்வைக் கடலில் சம்பவம்

நெல்லியடி-வடமராட்சி நிரு:

வல்வெட்டித்துறை ஆதிகோவில் கடற்பரப்பில் ஸ்ரீலங்கா கடற்படையினர் மீனவர் மீது பீரங்கித் தாக்குதலை மேற்கொண்டதில் மீனவர் மூவர் காணமல் போயுள்ளனர். சுமார் ஒன்றரை லட்சம் ரூபா பெறுமதியான படகு, இயந்திரம், வலைகள் நாசமடைந்தன.

(5-ம் பக்கம் பார்க்க)

## தந்தை செல்வா நினைவுதினம்

கொழும்புத்துறை

தந்தை செல்வா 18-வது நினைவுதினம் நாளை 26 ஆம் திகதி புதன்கிழமை மாலை 5-30 மணிக்கு யாழ் நாயன்மார் கட்டு அருள்மிகு ஸ்ரீ இராஜராஜேஸ்வரி (பேச்சியம்பாள்) ஆலயத்தில் விசேட பூசை வழிபாடுகளுடன் நடைபெறும்.

154

## புதிய இயக்குநர்கள்

(யாழ்ப்பாணம்)

அளவெட்டி மல்லாகம் பல நோக்குக் கூட்டுறவுச்சங்கத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டம் அண்மையில் நடைபெற்றபோது சங்கத்தின் புதிய தலைவராக திரு ப. கனகரத்தினமும், உபதலைவராக திரு. க. நடராசாவும், இயக்குநர்களாக, திருவாளர்கள் செ. புண்ணியமூர்த்தி, மு. சுப்பிரமணியம் செ ஜெராசநாயகம், க. பத்மநாதன், நா. தவஞானம் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

(வா)

## தி.மு.க உறுப்பினர். காலமானர்

(சென்னை)

தி.மு.க முன்னள் சட்டமன்ற உறுப்பினர் தாமு கதிரவன் நேற்று முன்தினம் மாலை காலமானர்.

சென்னை செங்கல்பட்டு வல்லற்றிகிராமத்தை சேர்ந்த இவர் இருமுறை சட்ட மன்ற உறுப்பினராக தெரிவு செய்யப்பட்டவர் என்பது குறிப்பிடத்தக்கது.

க-சி

## 2ம் தவணை ஆரம்பம்

(வட்டுக்கோட்டை)

சங்கானைக் கல்விக்கோட்டப் பிரிவுக்குட்பட்ட பாடசாலைக அனைத்தும் இரண்டாம் தவணைக்காக 26ம் திகதி புதன்கிழமை ஆரம்பமாகவுள்ளன.

இதற்கான சகல நடவடிக்கைகளையும் அதிபர்கள் மேற்கொண்டு வருகின்றனர் 139-ரி

## புலிகளின் குரல் நிகழ்ச்சி நிரல்

**1995—04—25**

செவ்வாய் இரவு

- 8-02 - மட்டக்களப்பு கட்டுமுறிப்பு இராணுவ முகாம் தகாப்பு பற்றிய சிறப்பு நிகழ்ச்சி
- 8-30 - செய்திகள்
- 8-40 - கருத்துக்களம் இ. இராஜேஸ்வரன் எழுதிய ''மழுப்பல்களும் நழுவல்களும்''
- 8-50 - மலரும் மொட்டுக்கள்

**1995—04—26**

புதன் காலை

- 7-02 - மாவீரவணக்கம்
- 7-15 - நீங்கள் கேட்டவை
- 7-30 செய்திகள்
- 7-35 - பத்திரிகைச் செய்திகள்
- 7-40 - நீங்கள் கேட்டவை நிகழ்ச்சியின் தொடர்ச்சி

## தமிழீழ வானெலி நிக்ழ்ச்சி நிரல்

**1995—04—25**

செவவாய் மாலை

- 5-01 - சிந்தனைச்சிதறல்
- 5-02 - எழுச்சிகீதம்
- 5-10 - புதியவை
- 5-15 - தமிழிசை
- 5-30 - வானெலி மதியூகம்-17
- 6-00 - சிந்தனைக்குச் சில விஞடிகள்
- 6 02 - இவ்வாரம் இவர்
- 6-15 - விளையாட்டுச் செய்திகள்
- 6-20 - என் தெரிவு
- 6-30 - மாலை நிகழ்ச்சிகள் யாவும் நிறைவுபெறும்:

# உணவுப்பொருட்கள் எடுத்துச்செல்ல படையினர் பலத்த கட்டுப்பாடு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் பல பகுதிகளுக்கும் உணவுப் பொருடகள் உட்பட பல அத்தியாவசியப் பொருட்களை எடுத்துச் செல்ல படையினர் பல கட்டுப்பாடுகளை விதித்து வருகின்றனர்.

மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே உணவுப் பொருட்களை எடுத்துச் செல்ல படையினர் அனுமதிக்கின்றனர். இது தவிர அனுமதியளிக்கப்பட்டுள்ள பல பொருட்கள் எடுத்துச் செல்வதற்கான அனுமதியும் படையினரால் தடுக்கப்பட்டு வருகிறது.

வர்த்தக நிலையங்களுக்கும் மிக குறைந்த தொகை பொருட்களே கொள்வனவு செய்வதற்கான அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இது அங்கு பொருட்களுக்கு பெரும் தட்டுப்பாட்டை ஏற்படுத்தியுள்ளது இதனுல் மக்கள் உணவுப் பொருட்களுக்கு பெரும் சிரமங்களை எதிர்நோக்கவேண்டியுள்ளது.

வீதித்தடைகள் பல பகுதிகளிலும்போடப்பட்டுசோதனை நடவடிக்கைகளும் தீவிரப்படுத்தப்பட்டுள்ளது. தடை முகாம்களில் வைத்து இளைஞர், யுவதிகள் பலத்த கெடுபிடிகளுக்குட்படுத்தப்படுவதுடன் இம்சிக்கப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

-சி

## இன்று

(கொழும்புத்துறை)

யாழ்: வண்ணை அருள்மிகு ஸ்ரீ வெங்கடேச வரதராஜப் பெருமாள் ஆலயத்தில் இன்று 25ம் திகதி செவ்வாய்க்கிழமை மாலை 4 மணிக்கு மாதாந்த ஏகாதசி விசேட அபிஷேகமும் பூசை, ஆராதனை வழிபாடுகளும் நடைபெறும். -154

0 0 0

(கொழும்புத்துறை)

பொன்னுலை அருள்மிகு ஸ்ரீ வரதராஜப் பெருமாள் கோவிலில் இன்று 25ம் திகதி செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3-00 மணிக்கு ஏகாதசி விசேட அபிஷேகமும், பூசை ஆராதனை வழிபாடுகளும் இடம் பெறும் - 154

## விளையாட்டு விழா

[பருத்தித்துறை]

கரவெட்டி பிரதேசசெயலக தட.கள விளையாட்டு விழா நெல்லியடி மத்திய மகாவித்தியாலய விளையாட்டு மைதானத்தில் இன்று 25ம் திகதி பிரதேச செயலர் திரு. எஸ். ஸ்ரீநிவாஸன் தலைமையில் நடைபெறுகின்றது. இவ்விளையாட்டு விழாவில் பிரதித் திட்டமிடல் பணிப்பாளர் திரு. வீ. எஸ். சுவாமிநாதன் முதன்மை விருந்தினராகக் கலந்து கொள்கிருர். - 52

# சுளகு பின்னும் முப்பது குடும்பங்களுக்கு நிதியுதவி

(உடுவில்)

மாசியப்பிட்டிக் கிராமத்தில் மரபு வழியாக சுளகு பின்னும் தொழிலை குடிசைக் கைத் தொழிலாக மேற்கொண்டு வரும் சுமார் முப்பது குடும்பங்களுக்கு அவர்களின் முயற்சியை ஊக்குவிக்கும் நோக்குடன் கடன் நிதி உதவி வழங்க இலங்கை வங்கி சுன்னுகம் கிளையினர் முன்வந்துள்ளனர்.

சுன்னுகம் இலங்கை வங்கியினர் தமது வெள்ளிவிழா ஆண்டில் பல உதவித் திட்டங்களை அரசு, அரசு சார்பற்ற நிறுவனங்களின் உதவியுடன் மேற்கொண்டு வருகின்றனர்.

யாழ்ப்பாண மாவட்டத்தில் இலங்கை வங்கியால் நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் சுயதொழில் முயற்சிக் கடன் திட்டத்தின்கீழ் இக்குடிசைக் கைத்தொழில் முயற்சியாளர்களுக்கு நிதிக்கடன் வசதி அளிக்கப்படவுள்ளது.

இதன் அடிப்படையில் முதல் கட்ட கடன் வழங்கு நிகழ்வு அண்மையில் மாசியப்பிட்டியில் நடைபெற்றது.

இந்நிகழ்வின்போது சுளகு பின்னும் ஆறு குடும்பங்களுக்கு தலா ஐயாயிரம் ரூபா வீதம் கடன் தொகையை யாழ்ப்பாண மாவட்ட இலங்கை வங்கி முகாமையாளர் திரு. எம் சண்முகசுந்தரம் முதன் முதலாக கையளித்தார்.

கடன் வழங்கும் வைபவம் இலங்கை வங்கி சுன்னுகம் கிளை முகாமையாளர் திரு. எஸ் விக்கினராசா தலைமையில் நடைபெற்றது. -109

# தென்னம்சோலை முதலீட்டுத் திட்டம் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

தென்னை வளத்தை அதிகரிக்கும் நோக்கில் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தினரால் தென்னம் சோலை முதலீட்டுத் திடடம் ஒன்று அன்னைபூபதி நினைவு நாளன்று அறிமுகம் செய்து வைக்கப்பட்டுள்ளது

கிராமிய நிதியத்தின் கீழ் மேகொள்ளப்பட்டுள்ள இத்திட்டம் கடந்த 19ம் திகதி அன்று நல்லூர் இளங்கலைஞர் மண்டபத்தில நடைபெற்ற அன்னைபூபதி 7ம் ஆண்டு நினைவு நிகழ்வில்வைத்து சம்பிரதாய பூர்வமாக ஆரம்பித்து வைக்கப்படடது,

இந் நிகழ்வில் தமிழீழ மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் திரு. பொன் தியாகம் இரு முதலீட்டாளர்களுக்கு முதலீட்டுப்பத்திரத்தை வழங்கி இத் திட்டத்தினை ஆரம்பித்து வைத்தார்,

இத் திட்டத்தின்முதலீட்டாளர்கள் முதலில் 2500ரூபா செலுத்தி இதில் இணைவதன் மூலம் இவர்களுக்கு 10 வருட முடிவில் 5 000ரூபாவும் மேலும் 5வருடமுடிவில 10 000 ரூபாவும் வழங்கப்படும் என அறிவிக்கப்படுகிறது,

இதேபோல் 1994ம் ஆண்டு மாவீரர் நாளையொட்டி மாவீரர் சோலை திட்டம்ஒன்று ஆரம்பிக்கப்பட்டு தேக்கு மரநடுகை திட்டம் ஒன்று கிராமிய நிதியத்தின் கீழ் செயற்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது. இதன் மூலம் நாட்டில் மரநடுகை அதிகரித்து வெளிநாட்டு நிதிகளை எதிர்பார்க்காமலே நாட்டின் மூலவளம் பெருக வாய்ப்புகள் ஏற்படும்,

# சுப்பிரமணியசுவாமி மீதான வழக்குவாபஸ் பெறப்பட்டது

(சென்னை)

ஜனதா கட்சித் தலைவர் டாக்டர் சுப்பிரமணிய சுவாமி சமூகத்தின் ஒரு பிரிவினரை இழிவுபடுவதாக கூறி தமிழக அரசு அவர் மீது தொடர்ந்த வழக்கை அது வாபஸ் பெற்றுள்ளது.

இது தொடர்பாக முதல்வர் செல்வி ஜெயலலிதா நேற்று வெளியிட்ட அறிக்கையொன்றில்; டாக்டர் சுப்பிரமணிய சுவாமி அவ்வாறு பேசியதற்காக பகிரங்கமாக மன்னிப்பு கேட்டிருப்பதை அடுத்து அரசு இந்த முடிவை மேற்கொண்டிருப்பதாக குறிப்பிட்டுள்ளார்.

இது குறித்து சுப்பிரமணிய சுவாமி ஏற்கனவே மன்னிப்பு கேட்டதுடன் தான் வேண்டுமென்று ஒரு சமூகத்தை இழிவு படுத்தும் நோக்கில் அந்த வார்த்தையை பயன்படுத்தவில்லை எனவும் கூறியிருந்தார் எனினும் சுப்பிரமணிய சுவாமிக்கு எதிராக தமிழக அரசு வழக்கு தாக்கல் செய்ததை தொடர்ந்து அவரை கைது செய்யுமாறு உத்தரவிட்டதும் பின்னர் அது வாபஸ் பெறப்பட்டதும் தெரிந்ததே. -சி

# குடியேற்றத் திட்டத்தில் பாலர்பாடசாலை, வாசிகசாலை

(யாழ்ப்பாணம்)

தியாகத்தாய் அன்னை பூபதி நினைவு நாளை முன்னிட்டு கோப்பாய் குடியேற்றத்திட்டத்தில் வைத்து பாலர் பாடசாலை ஒன்றும் வாசிகசாலை ஒன்றும் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டுள்ளன

இசகுடியேற்றத் திட்டத்தின் கீழ் வாழும் மக்களதும், சிறுவர்களதும் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தும் நோக்கோடு யாழ் மாவட்டவெதுப்பக உரிமையாளர் சங்க உதவியுடன் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் கிராமிய உற்பத்திக் குழு பகுதியினுல் அமைக்கப்பட்ட இக்கட்டிட அங்குரார்ப்பண விழா கோப்பாயில் நடைபெற்றது-

கோப்பாய் வட்டத்தொடர்பாளர் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் கோப்பாய் வட்ட அரசியல் துறை பொறுப்பாளர் திரு- ஸ்ரீதர் தேசியக்கொடியை ஏற்றி வைக்க பாலர் பாடசாலையினை பொருண்மிய மேம்பாட்டு நிறுவன உதவிப் பணிப்பாளர் திரு. கந்தனும்வாசிகசாலையை வெதுப்பக உரிமையாளர் சங்க தலைவரும் திறந்து வைத்தனர். பாலர்பாடசாலை சிறுர்ளுக்கான பாடசாலை உபகரணஙகளை யாழ் மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் திரு, இளம்பரிதி வழங்கி வகுப்புக்களை ஆரம்பித்து வைத்தார்.

# 14 விடுதலைப் புலிகள் கட்டுமுறிப்பில் வீரச்சாவு

(யாழ்ப்பாணம்)

சட்டுமுறிவு இராணுவ முகாம் தகர்ப்பின்போது 14 விடுதலைப் புலிகள் வீரசசாவடைந்தனர். வீரச்சாவடைந்த விடுதலைப்புலிகளின் விபரம் வருமாறு:

மேஜர் அச்சுதன், லெப். கண்ணதாஸ் லெப், சிவம். லெப். ராஜேந்திரன், லெப். கைலதாஸ், 2ம் லெப். சிவராஜ், 2ம் லெப். இலக்கியன். வீரவேங்கைகள்; தனபாலசிங்கம், ஈழவர்மன், மாவேந்தன், ஜேசு, ஞானமூர்த்தி, தனபாலசிங்கம. இசைவாணன்

இவர்களுக்கு புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துள்ளனர். ம-சி

# மக்கள் வங்கி கடன் வட்டிவீதம் குறைப்பு

(யாழ்ப்பாணம்)

மக்கள் வங்கி வழங்கும் கடன்களுக்கான வட்டியை கடந்த மார்ச் மாதம் முதல் வெகுவாகக் குறைத்துள்ளதாக மக்கள் வங்கி வடபிரதேச முகாமையாளர் திரு இ. அருளானந்தம தெரிவித்துள்ளார்

குறைக்கப்பட்ட வட்டி வீதத்தின்படி விவசாயம் மீன்பிடி, மிருக வளர்ப்பு ஆகியவற்றுக்கு வழங்கும் கடன்களுக்குரிய வட்டியை 20% தத்திலிருந்து 17 . 5 % வீதமாகவும், தொழிற்றுறைகளுக்குரிய வட்டியை 21% தத்திலிருந்து 17 . 5% தமாகவும், சுற்றுலாத்துறைக்கு வழங்கும் வட்டி 23% தத்திலிருந்து 17 . 5 %தமாகவும் குறைந்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

## ஒய்வூதிய கொடுப்பனவு

(யாழ்ப்பாணம்)

யாழ், மாவட்டத்திலுள்ள விவசாயிகள் ஒய்வூதியத் திட்டத்தின் கீழ் ஒய்வூதியம் பெறும் விவசாயிகளின் 1994 பங்குனி சித்திரை மாதங்களுக்கான ஒய்வூதியக் கொடுப்பனவு இன்று 25ம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 10 00 மணிக்கு கமத்தொழில் காப்புறுதிச்சபை மாவட்டக் காரியாலயத்தில் வழங்கப்படவுள்ளது இதனைப் பெறுகின்ற விவசாயிகள் தவருது தமது ஒய்வூதியத்தை பெற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிருர்கள்,

## இன்று திருநாவுக்கரசு நாயனுர் விழா

[வட்டுககோட்டை]

வட்டுக்கோட்டைதிருநாவுக்கரசு மகாவித்தியாலயத்தில் இன்று செவ்வாய்க்கிழமை காலை 8 மணி முதல் மாலை 2 மணி வரை 'தி நாவுக்கரசு நாயனுர் விழா' அதிபர் நா. க தங்கரத்தினம் தலைமையில் நடைபெறவுள்ளது.

காலை 8 மணியளவில் திருநாவுக்கரசு நாயனுர் திருவுருவப்படம் வித்தியாலயத்திலிருந்து ஊர்வலமாக மேளவாத்தியங்கள் சகிதம் எடுத்துவரப்பட்டு விழா நடைபெறும்.

விழாவில் பண்டிதர் க. ஈஸ்வரநாதபிள்ளை புலவர் க. தேவதாசன், சைவமணி திரு சி, மருதபிள்ளை, ஆசிரியமணி கா சின்னத்துரை, திரு. எஸ். சிவபாலன் ஆகியோர் உரைநிகழ்த்தவுள்ளனர்,

திரு செ. கருணேசனின் பண்ணிசைக்கச்சேரியும் இடம் பெறும, 139-

### மணிவாக்கு

மனப்பண்பிற்கு அத்திவாரமாக இருப்பது, உடலிலே ஒரு தெம்பு; மனத்திலே ஒரு தைரியம்; உள்ளத்திலே ஓர் உணர்ச்சி புத்தியில் ஒரு வேகம் என்பனவாகும்.
-பெர்ட்ரண்ட்ரஸ்ஸல்.

## நமது நோக்கு

### போரா? சமாதானமா?

''முழு அளவிலான போர் ஒன்றை நடத்த அரசு தயாராக இருக்கிறது!'' என ஜனாதிபதி சந்திரிகா தெரிவித்துள்ளார் என 'வெரித்தாஸ்' வானொலி பேட்டி ஒன்றை ஆதாரம் காட்டிச் செய்தி வெளியிட்டுள்ளது.

இதில் வேடிக்கை என்னவென்றால், அதே பேட்டியில், சமாதானப் பேச்சுக்களை மீண்டும் ஆரம்பிப்பதற்கு அரசு தயாராக இருக்கிறது எனவும் கூறியுள்ளார்.

இவரின் நிலைப்பாடு என்ன என்பதையிட்டு நாடு குழப்பத்தில் ஆழ்ந்துள்ளது.

ஒரேசமயத்தில்- முரண்பாடான கருத்துக்களைக் கூறி மக்களை மயக்கத்தில் வைத்திருப்பது ஒரு அரசியல் சாணக்கியம் என்ற கருத்து இனிமேலும் எடுபடாது.

ஏனெனில்- ''போர் என்றால் போர்; சமாதானமென்றால் சமாதானம்! என இதே போக்கைக் கடைப்பிடித்த முன்னாள் ஜனாதிபதி ஜே. ஆர். வெற்றி கண்டாரா?

இந்தப் போக்கு எதிர் விளைவுகளை ஏற்படுத்தித் தமிழ் மக்களின் போராட்ட உணர்வுகளை வளர்த்தெடுத்தது என்ற உண்மையை ஜனாதிபதி அறியாமலா இருக்கிறார்?

தீர்க்கமான முடிவோடு செயற்படாது நேர்மையான முறையில்சமாதான முயற்சிகளைத் தொடராது வெறும் வாக்குறுதிகளோடு இழுத்தடிப்புகளோடு கருமம் ஆற்றலாம் என ஜனாதிபதி போட்ட கணக்குப் பிழைத்து விட்டது.

ஜனாதிபதியின்பேச்சினால் உற்சாகமடைந்த படையினர் எடுக்கும் நடவடிக்கைகள் மேலும் தோல்விகளையும் மக்கள் வெறுப்பையும் சம்பாதிக்கும் என்பது உண்மை.

உதாரணமாக-அதிதீவிர பாதுகாப்பு நடவடிக்கை எனக்கூறிக்கொண்டு, கொழும்பில் தமிழ் இளைஞர்களைக் கைதுசெய்வது எதிர் விளைவுகளையே ஏற்படுத்தும்.

வவுனியா நகரில் தேடுதல் வேட்டை எனக் கூறிக்கொண்டு தமிழ் மக்களுக்கு இடையூறுகள் விளைவிப்பதும், பயணிகளைத் தொல்லைப்படுத்துவதும் அரசுக்கு நன்மை பயக்கும் விடயங்களா?

தமிழ் மக்களுக்குத் தொல்லைகொடுப்பதுதான் பாதுகாப்பு நடவடிக்கையா?

# றுவாண்டாவில் அகதி முகாமிலிருந்து 8 ஆயிரம் சடலங்கள் மீட்கப்பட்டன

(கிகாலி)

றுவாண்டாவில் சிபிகு அகதி முகாமில் இடம்பெற்ற மிகக் கொடூர படுகொலைச் சம்பவத்தில் உயிரிழந்த எண்ணாயிரத்திற்கும் மேற்பட்ட அகதிகளின் சடலங்கள் மீட்கப்பட்டுவருவதாக ஐ. நா. மற்றும் யு. என். எச். சி. ஆர். அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்

கடந்த சனிக்கிழமை இந்த அகதிமுகாமை மூடச்சென்ற றுவாண்டா படையினரின் நடவடிக்கையை அகதிகள் எதிர்த்தபோது அங்கிருந்த ஒரு லட்சத்திற்கும் மேற்பட்ட அகதிகள் மீது சுமார் ஒருமணி நேரம் மேற்கொள்ளப்பட்ட கொடூரத் தாக்குதலிலேயே எண்ணாயிரத்திற்கும் மேற்பட்டோர் உயிரிழந்தனர்.

10,000 பேர் வரை படுகாயமடைந்துள்ளனர். காயமடைந்தவர்களில் நூற்றுக்கணக்கானோரின் நிலை கவலைக்கிடமாயுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. முகாமிலிருந்து தப்பியோடிய ஏனைய அகதிகள் நகரின் எல்லைப்புறத்திலுள்ள விளையாட்டரங்கில 80,000 அகதிகள் தஞ்சமடைந்துள்ளனர்.

தற்போது படுகொலை நடைபெற்ற அகதிமுகாமில் எவருமே இல்லை. அங்கு உயிரிழந்தவர்களின் சடலங்களே காணப்படுகின்றன. சடலங்களை மீட்கும் பணிகள் தீவிரமாக நடைபெற்று வருகின்றன. சடலங்களுக்கிடையில்படுகாயமடைந்த நிலையில் காணப்பட்ட பலர்மீட்கப்பட்டு ஆஸ்பத்திரிகளுக்கு அனுப்பப்பட்டு வருகின்றனர்.

தற்போது சிபிகோ பகுதியில் பெரும் பதற்றம் நிலவி வருகிறது. பதற்றத்தை குறைக்கும் விதத்தில் றுவாண்டா அதிபர் இப்பகுதியிலிருந்து படையினரை விலக உத்தரவிட்டுள்ளார். இப்படுகொலைக்கு அரச படையே காரணம் என பல நாடுகளும் குற்றம் சாட்டியுள்ளன.

இப்படுகொலைச்சம்பவத்தையடுத்து றுவாண்டாவின் பல பகுதிகளிலுமுள்ள பல அகதி முகாம்கள் மூடப்பட்டுள்ளன. அகதிமுகாம்களிலிருந்து ஆயிரக்கணக்கானோர் நாட்டின் எல்லைப்பகுதிகளுக்கு சென்றுள்ளனர். மீண்டும்படுகொலைகள் இடம்பெறலாமென அவர்கள் அஞ்சுகின்றனராம்

இதற்கிடையில் அகதிமுகாமிலிருக்கும் சடலங்கள் பழுதடைந்து வருவதால் சடலங்களை அகற்றும்பணி தாமதமடைந்து வருவதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன. -சி

## பலதும் பத்தும்

### அந்த மூளை

இரண்டாவது உலகப் போருக்குப் பின் ஆஸ்திரியா தன்னை ஒரு நடுநிலை நாடாகப் பிரகடனப்படுத்தியது. ஏன் தெரியுமோ? இந்த அறிவிப்பால் நாட்டின் இராணுவச் செலவு உற்பத்திக்குத் திருப்பிவிட வழி ஏற்பட்டது. இங்கு.. நாடு சீரழிகிறது இராணுவச் செலவால்?

அந்த நாடு இன்னொன்றும் செய்தது. பல கோடி பணச்செலவில் 22 மாடிக் கட்டடம் ஒன்றைக் கட்டியது சர்வதேச நிறுவனமான Unida விற்கு அக் கட்டிடத்தை வாடகைக்கு விட்டது. மாத வாடகை ஒரேயொரு ஷில்லிங் மாத்திரம் தான்!

ஏன் அப்படி? பல வெளிநாட்டவர்கள் இந்த நிறுவனத்திற்கு வந்து போவதால் பெருமளவு அந்நியச் செலாவணி குவிந்தது, இங்கு யுத்தச் சூழல்... யார் வந்து போவார்கள்?

— மயூரன்

## இராசி பலன்

25–04–1995

செவ்வாய்க்கிழமை

(தமிழுக்கு சித்திரை—12)

ஏகாதசி: பின்னிரவு 9-17 வரை, சதயம்: பிற்பகல் 3-24 வரை, மரணயோகம், இராகுகாலம்; மாலை 3-20 முதல் 4-30 வரை, சுபநேரம்: காலை 10-30 முவல் 12 வரை.

மேடம்: வாக்குறுதிகளை காப்பாற்றுதல், காரியசித்தி, பணப்புளக்கம்.

இடபம்: விரோதிகளை ஜெயித்தல், விவாதம், மனக்களிப்பு.

மிதுனம்: தீராத பிரச்னை, தாயார் துயர், செலவு.

கடகம்: தொழில் குறைபாடு, வீண்சங்கடம், அலைச்சல்.

சிங்கம்: மனைமாற்றம், முயற்சி பலிதம், தியாகம்.

கன்னி: நினைத்தது நிறைவேறல, குடும்பசுகம், தொழில் லாபம்.

துலாம்: அத்துமீறல், பிற்போக்குநிலை, எதிரிகள் பயம்.

விருச்சிகம்: கைப்பொருள் இழப்பு, உறவில் விரிசல், கடன்படல்.

தனுசு: சுபகாரியநிகழ்ச்சி, தொழில் பாராட்டு, சந்திப்பு.

மகரம்: குடும்ப மனஸ்தாபம், அமைதியின்மை, பயணம் நடை.

கும்பம்: செய்தொழில் முதலீடு, தந்தையர் உதவி, பிறர் பெருமை.

மீனம்: முயற்சி தோல்வி, பந்துக்கள் வில்லங்கம், இரகசியம் வெளிவரல்.

— ஜோஸ்யர்

# சந்திரிகாவின் அணுகுமுறையே தற்போதைய போருக்குக் காரணம்

(கொழும்பு)

விடுதலைப்புலிகளுக்கும் தற்போதைய சந்திரிகா தலைமையிலான அரசாங்கத்துக்கும் மீண்டும் மோதல் ஆரம்பித்துள்ளமை குறித்து தென்னிலங்கை பத்திரிகைகள் கடும் வருத்தம் வெளியிட்டுள்ளன.

ஜனாதிபதி சந்திரிகாவின் தவறான அணுகுமுறையும், தற்போதைய யதார்த்த நிலையை அவர் புரிந்துகொள்ள தவறியமையுமே இம்மோதலிற்கு பிரதான காரணமாகுமெனவும் அப்பத்திரிகைகள் மேலும் தெரிவித்தன.

இதேவேளை மீண்டும் ஒரு யுத்தத்திற்கு இராணுவம் ஆயத்தமாகவில்லை என்ற கருத்துப்பட இராணுவ ஆய்வாளர்கள் விமர்சித்துள்ளனர்.

ஜனாதிபதி சந்திரிகாவின் நழுவல் வாத பேச்சும், இழுத்தடிப்பு போக்குமே புலிகளின் தாக்குதலுக்கான காரணமெனவும் பலர் குற்றம் சாட்டியுள்ளனர்

தேர்தலின்போது அளித்த வாக்குறுதிகளை திருமதி சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்கா ஜனாதிபதியானவுடன் மறந்துவிட்டார். அதேபோன்று தான் விடுதலைப்புலிகளுடனான அணுகுமுறைகளிலும் அவர் முன்னுக்குப்பின் முரணாக நடந்துள்ளார் என்றும் அரசியல் அவதானிகள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

க-ரி-சி-

# கணேமுல்ல ரயில் நிலையத்தில் வடபகுதி பயணிகளிடம் கொள்ளை

(கொழும்பு)

கணேமுல்லை ரயில் நிலையத்தில் வவுனியா நோக்கிவந்த ரயிலில் தங்கச்சங்கிலிகளும் பணம், பொருட்களும் கொள்ளையடிக்கப்பட்டுள்ளது. இச் சம்பவம் கடந்த வெள்ளிக்கிழமை இரவு நடைபெற்றுள்ளது.

வவுனியா நோக்கி வந்த இந்த ரயில்கணேமுல்ல ரயில்நிலையத்தில் தரித்து நிற்கையில் திடீரென ஆயுதங்கள் சகிதம் ரயிலினுள் நுழைந்த கொள்ளைக் கோஷ்டி ஒன்று ஆயுதமுனையில் பெண்பயணிகளை மிரட்டி அவர்களிடமிருந்து ஐந்து தங்கச் சங்கிலிகளை பறித்துச் சென்றுள்ளது.

மேலும் பயணிகளிடமிருந்து பெருமளவு பணத்தையும் அவர்களது உடமைகளையும் கொள்ளையடித்துச் சென்றுள்ளது இரவுநேரம் என்பதால் பயணிகளால்கொள்ளையர்களை எதிர்க்க முடியாத நிலை ஏற்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது. வடபகுதி பயணிகளே இக்கொள்ளைச் சம்பவத்தில் ஆபரணங்கள், பொருட்கள், பணத்தைஇழந்தவர்களாவர்

இந்த ரயில் நிலையத்தில் அண்மைக்காலங்களில் பல கொள்ளைச் சம்பவங்கள் நடைபெற்றுள்ளன. கடந்த இருவாரத்திற்கு முன்பும் பயணிகளிடமிருந்து ஏழு தங்கச் சங்கிலிகள் கொள்ளையரால் பறித்துச் செல்லப்பட்டிருந்தது.

மட்டக்களப்பு, வவுனியா ரயில்கள் இந்த ரயில் நிலையத்தில் தரித்துச்செல்வதால் இக்கொள்ளையர்களின் இலக்காக தமிழ் மக்களே இருந்துவருகிறார்கள், அண்மைக்கால கொள்ளைச் சம்பவங்கள் குறித்து பல புகார்கள் தெரிவிக்கப்பட்டபோதிலும் எதுவித பாதுகாப்பு நடவடிக்கைகளையும் பொலிஸார்மேற்கொள்ளவில்லை. இதனால் வடக்கு-கிழக்கு பயணிகள் தொடர்ந்தும் பாதிப்படைந்து வருகிறார்கள். -சி

# புலிகள் என சந்தேகிக்கப்படும் மூவர் கொழும்பில் கைதாம்

(கொழும்பு)

கொழும்பில் கடந்த மூன்று நாட்களுக்கு முன் விடுதலைப் புலிகள் என சந்தேகிக்கப்படும் மூவர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் மா அதிபர் பிராங் டி சில்வா கூறியுள்ளார்.

இரகசியப் பொலிஸாரின் விசாரணைக்குட்படுத்தப்பட்டுள்ளதாகவும் இவர்கள் கொழும்பில் கேந்திர ஸ்தானங்களில் தாக்குதல் நடாத்துவதற்காக அனுப்பப்பட்ட தாக்குதல் படைத்தலைவர்கள் எனவும் பிராங் டி சில்வா தெரிவித்தார்.

இதுபற்றி அவர் மேலும் கூறுகையில்: கொழும்பில் விசாரணைக்கென அழைத்துச் செல்லப்பட்ட ஆயிரம் சந்தேக நபர்களில் அரைவாசிக்கும் மேற்பட்டோர் விடுவிக்கப்பட்டுள்ளனர். கொழும்பிலும் கைது செய்யப்பட்டவர்களில் 500க்கும் அதிகமான இளைஞர்கள் விசாரணையின் பின் விடுவிக்கப்பட்டனர்.

ஏனையோரும் தீவிரவாத நடவடிக்கையில் சம்பந்தப்பட்டவர்களா என்பதுதெளிவுபடுத்தப்பட்ட பின்னர் விடுவிக்கப்படுவார்கள். எனினும் தீவிரவாத நடவடிக்கைகளில் சம்பந்தப்பட்டதாக காணப்படுவோர் தொடர்ந்தும் விசாரணைக்காக தடுத்துவைக்கப்படுவார்கள்.

மக்களின் பாதுகாப்பு கருதியே இச்சோதனை நடவடிக்கை நகரெங்கும் நடாத்தப்படுகிறது. எந்த வகையிலும் பொது மக்களுக்கு வசதியீனத்தையோ எரிச்சலையோ ஏற்படுத்துவது பொலிஸாரின் நோக்கமில்லை எனவும் கூறினார். -சி

# யாழ். கடல் நீரேரியில் மீனவர் தாக்கப்பட்டனர்

(யாழ்ம்பாணம்)

யாழ். கடல்நீரேரிப் பகுதியில் மூன்று மீனவர்கள் கடந்த வியாழக்கிழமை சிறிலங்கா இராணுவத்துடன் கூட்டுச் சேர்ந்து இயங்கும் தேச விரோதிகளால் தாக்கப்பட்

(5ம் பக்கம் பார்க்க)

தமிழீழ தாயகம் தூங்கிடாது
அது தறிகெட்டு ஒருபோதும் தேங்கிடாது

# அம்பாறையில் ராணுவ முகாம்களின் பாதுகாப்பு அதிகரிக்கப்படுகிறது

(மட்டுநகர்)

அம்பாறை மாவட்டத்தின் பொத்துவில் பிரதேசத்திலுள்ள அனைத்து சிறிலங்கா படை முகாம்களும்துரித கெதியில் பலப்படுத்தப்படுகின்றன.

முகாம்களுக்கு அருகிலுள்ள மக்கள் வலுக்கட்டாயமாக அப்புறப்படுத்தப்படுகின்றனர்.

குறிப்பாக அறுகம்பை முகாம், காஞ்சிரம் குடா, கோமாரி, ஊரணி, செங்காமம் பகுதி முகாம்கள் கொங்கிறீட்களால் தடுப்புக்கல் வைக்கப்பட்டு பலப்படுத்தப்பட்டு வருகின்றன.

இரவோடிரவாக மக்களின் வாகனங்கள் உட்பட இராணுவ வாகனங்களில் மண்மூடைகள் தயாரிக்கப்பட்டுமுகாம்களுக்கு எடுத்துச் செல்லப்படுவதாக அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இவை தவிர அம்பாறை மாவட்டத்தில் ஏனைய பகுதி படை முகாம்களும்துரித கெதியில் பலப்படுத்தப்படுகின்றன.

எல்லையோர முகாம்களுக்கு மேலதிக துருப்புகள் நகர்த்தப் படுவதாக அங்கிருந்துவரும் செய்திகள் மேலும் தெரிவிக்கின்றன. (ரி-சி)

## ஆசிரியர் சங்க கூட்டம்

(வட்டுக்கோட்டை)

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்க வட்டுக்கோட்டைக் கிளையின் நிர்வாக விசேட கூட்டம் 27ம் திகதி வியாழக்கிழமை பிற்பகல் 3-00 மணியளவில் சித்தன்கேணி ஸ்ரீகணேச வித்தியாலயத்தில் தலைவர் திரு. நா. க. தங்கரத்தினம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இடமாற்றங்கள், ஆசிரியர்களின் சம்பள விபரங்கள், சம்பளநிலுவைகள் மற்றும் பல முக்கிய விடயங்கள் பற்றி இக் கூட்டத்தில் ஆராயப் படும். 139-ரி

## ஹிட்லரின் எலும்புகள் ஜேர்மன் செல்கின்றன

[லண்டன்]

சர்வாதிகாரி ஹிட்லரின் எலும்புகள் மீண்டும் ஜேர்மனிக்கு கொண்டு செல்லப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

அடோல்ப் ஹிட்லர் இறந்து ஐம்பது வருடங்களாகியும் அவரது உடல் எலும்புகள் தற்போதும் பாதுகாக்கப்பட்டு வருகின்றன. இதுவரை காலமும் லண்டனிலிருந்த எலும்புகள் மீண்டும் தற்போது ஜேர்மனிக்குக் கொண்டு செல்லப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

ஜேர்மனியின் வேண்டுகோளுக்கிணங்கவே இந்த எலும்புகள் லண்டனிலிருந்து ஜேர்மனிக்குக் கொண்டு செல்லப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது; (சி)

## புலிகளுக்கு அ.தி.மு.க. அரசு ஆதரவு வழங்கி வருகிறது

### தமிழக காங்கிரஸ் குற்றச்சாட்டு

(சென்னை

தமிழகத்தில் விடுதலைப்புலிகளுக்கு ஆளும் அ.தி.மு.க. அரசு முழு ஆதரவு வழங்கி வருவதாக தமிழக எதிர்க்கட்சித்தலைவர் எஸ். ஆர் பால சுப்பிரமணியம் தெரிவித்துள்ளார்,

இராமநாதபுரம் மாவட்டத்தில் பத்திரிகையாளர் மத்தியில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் அரசின் இந்நடவடிக்கை தமிழக மீனவரை பெரும் இக்கட்டுக்குள் உள்ளாக்கும் என்றும் செல்வி ஜெயலலிதா உடன்பதவி விலகவேண்டும் என்று மீண்டும் தாம் கேட்டுக்கொள்வதாகவும் தெரிவித்துள்ளார்.

தமிழக சட்ட சபைக் கூட்டங்களில் இந்திரா காங்கிரஸ் கட்சி உறுப்பினர் கலந்து கொள்வதா இல்லையா என்பது பற்றி இன்று நடைபெறு கூட்டத்தில் முடிவு எடுக்கப்படும் என்றும் தெரிவித்தார். க-சி

## குறைந்த வருமானமுள்ளவர்களுக்கு மானிய அடிப்படை உதவி

(உடுவில்)

கிராமப்புறங்களில் வாழும், எழுநூறு ரூபாவுக்கு குறைந்த மாத வருமானம் உடையவர்களுக்கு மானிய அடிப்படையிலான உதவித் திட்டம் இவ்வருடம் செயற்படுத்தப்படவுள்ளது.

தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் யாழ்ப்பாண மாவட்ட அலுவலகத்தினால் மேற்படி திட்டம் இவ்வாண்டு செயற்படுத்தப் படவுள்ளது.

மேற்படி சபையினால் இவ்வருடம் வீடமைப்புக்கான மானிய உதவித்திட்டம், வீடமைப்புக்கடன் ஆகியன வழங்கப்படவுள்ளன.

எழுநூறு ரூபாவுக்கு குறைந்த வருமானமுடைய கிரா

(5ம் பக்கம் பார்க்க)

## தான் வெளியிட்ட கருத்துக்கு சுப்பிரமணியசுவாமி வருத்தம்

(சென்னை)

குறிப்பிட்ட ஒரு சமூகத்தவரது மனத்தை புண்படுத்தும் விதத்தில் தாம் வெளியிட்ட கருத்து குறித்து மனம் வருந்துவதாக ஜனதாக் கட்சித்தலைவர் டாக்டர் சுப்பிரமணிய சுவாமி தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக சென்னையில் அறிக்கை ஒன்றை வெளியிட்டுஉரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்

இதேவேளையில் டாக்டர் சுப்பிரமணிய சுவாமி மீது தாம் நடவடிக்கை எடுக்கப் போவதாக தமிழக முதல்வர் செல்வி ஜெயலலிதா தமிழக சட்டப் பேரவையில் தெரிவித்ததும் இங்கு குறிப்பிடத்தக்கது.

டாக்டர் சுப்பிரமணிய சுவாமியை கைது செய்ய பிறப்பிக்கப்பட்ட உத்தரவு சென்னை மாநகரத்தில் மட்டும் தான் நடைமுறைப்படுத்த வேண்டும் என்று சென்னை உயர் நீதிமன்றம் பிறப்பித்த ஆணையில் தக்க மாற்றங்களை ஏற்படுத்த தமிழக அரசு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாகவும் முதல்வர் ஜெயலலிதா தெரிவித்துள்ளார். க-ரி-சி

## இந்திய தலைவர்களைக் கொல்ல பாகிஸ்தான் சதி நடவடிக்கை

[புதுடில்லி]

இந்திய தலைவர்களை படுகொலை செய்ய பாகிஸ்தான மேற்கொணட சதிமுயற்சிகள் அம்பலத்திற்கு வந்துள்ளதாக இந்திய பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்திய அரசியல் தலைவர்கள் மற்றும் கட்சித் தலைவர்களையும் ஜம்மு—காஷ்மீரின் முன்னாள் முதலமைச்சர் பரூக் அப்துல்லா உட்பட சில தலைவர்களை கொல்லவும் இந்த சதி முயற்சி மேற்கொள்ளப் பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

ஜம்மு—காஷ்மீர் பொலிசாரினால் கைது செய்யப்பட்ட முகமட் குதூப் என்ற முஸ்லிம் தீவிரவாதி காஷ்மீரிலுள்ள காங்கிரஸ் தலைவர்களை கொல்ல பாகிஸ்தான் உளவு நிறுவனம் தனக்கு பெருந் தொகைப் பணம் வழங்கியதாக ஒத்துக்கொண்டுள்ளார்.

கடந்த ஜனவரி மாதம் 26-ந் திகதி இந்திய குடியரசு தினத்தன்று ஜம்மு-காஷ்மீரில் இடம்பெற்ற குண்டு வெடிப்பில் எட்டுப் பேர் கொல்லப் பட்டதற்கும் இந்த நபருக்கும் தொடர்புள்ளது எனவும் விசாரணை மூலம் தெரியவந்துள்ளதாம்.

இதேவேளை முஸ்லிம் தீவிரவாதிகளின் நடமாட்டம் அதிகரித்துள்ள மாநிலங்களில் உள்ள அரசியல் தலைவர்களின் பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டுள்ளது. -சி

## மீண்டும் யுத்தம் பங்களாதேஷ்கவலை

(டாக்கா)

இலங்கையின் வடக்கு-கிழக்கு பகுதியில் மீண்டும் போர் வெடித்திருப்பது குறித்து பங்களாதேஷ் அரசு கவலை தெரிவித்துள்ளது.

இந்த யுத்தத்தை நிறுத்தி மீண்டும் சமாதானப் பேச்சுக்களில் அரசும் புலிகளும் ஈடுபடவேண்டுமென பங்களாதேஷ் அதிபர் திருமதி பேகம் ஹாலிதா ஷியா கோரிக்கை விடுத்துள்ளார்.

இதேபோன்றே சமாதான நடவடிக்கைகளை மீண்டும் ஆரம்பிக்குமாறு ஜனாதிபதி சந்திரிகாவுக்கு பல நாடுகளும் கோரிக்கை விடுத்துவருகின்றன, -சி

## தமிழகத்தில் ஆலயத்தில்மோதல் 2பேர்வெட்டிகொலை

(சென்னை)

இராமநாதபுரம் கிச்சான் குறிச்சி என்ற கிராமத்தில் நேற்று முன்தினம் வழிபாட்டு தலம் ஒன்றில் இரு குழுவினருக்கிடையே ஏற்பட்ட மோதலில் இருவர் வெட்டிக் கொல்லப்பட்டனர் 15பேர் வெட்டுக் காயங்களுடன் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டனர்.

வாள் கத்திகற்கள் போன்ற பயங்கர ஆயுதங்கள் இம் மோதலின் போது பாவிக்கப் பட்டது. பொலிசார் மிகுந்த சிரமத்தின் மத்தியில் நிலமையை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர். க ரிசி

## கொழும்பில் இரவு பகலாக வீடுவீடாக தீவிர தேடுதல்

(கொழும்பு)

கொழும்பிலும் அதன் சுற்றுப் புறங்களிலும் கடந்த சில தினங்களாக இரவு-பகலாக படையினர் வீடுவீடாக தேடுதல் நடாத்தி பெருமளவு தமிழரை கைது செய்துள்ளனர்.

கொழும்பு நகரை விடுதலைப் புலிகள் தற்கொலை படை தாக்கலாமெனவும் இதற்காக பெருமளவு புலிகள் கொழும்பு நகரினுள் ஊடுருவி விட்டதாகவும் புலனாய்வுத் துறையினர் எச்சரித்ததைத் தொடர்ந்து இந்தக்கைதுகள் நடைபெற்று வருவதாக ஏ.எவ்.பி. செய்தி தெரிவித்தது.

தமிழர் பெருமளவில் வசிக்கும் பகுதிகளில் ஆயிரக்கணக்கான படையினர் சுற்றிவளைத்து இரவு-பகலாக ஒவ்வொரு வீடுவீடாகவும் தேடுதலை மேற்கொண்டு வருகிறார்கள் தமிழ் இளைஞர் யுவதிகளென நேற்றுமுன்தினம் மட்டும் ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் கைது செய்யப்பட்டுள்ளனர் இதில் அரைவாசிக்கும் மேற்பட்டோர் தொடர்ந்தும் தடுத்து வைக்கப்பட்டு விசாரிக்கப்பட்டு வருகிறார்கள்.

தமது தேடுதல் நடவடிக்கையில் இதுவரை விடுதலைப்புலிகள் எனச் சந்தேகிக்கப்படும் பலர் கைது செய்யப்பட்டிருப்பதாக படையினர் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை வீடுகளில் தேடுதல்களை நடாத்திவரும் படையினர் தங்களை இம்சைப்படுத்தி வருவதாக பல தமிழர்கள் பொலிசாரிடம் புகார் தெரிவித்துள்ளனர். இது குறித்து நடவடிக்கை எடுக்கப்படுமென பொலிஸ்மா அதிபர் பிராங்டி சில்வா கூறியுள்ளார். (சி)

## பரிசாரகர்களுக்கு பயிற்சி முடிந்தும் பரீட்சை நடைபெறவில்லை

(பண்டத்தரிப்பு)

யாழ். சுகாதார பிரிவில் பரிசாரகர்களாக (முற்றன்டன்) தெரிவுசெய்யப்பட்டு மூன்று மாத கால பயிற்சியளிக்கப்பட்ட 48 திணைக்கள ஊழியர்களுக்கு இரண்டு மாத காலமாகியும் இதுவரை எழுத்துப் பரீட்சை, செய்முறை பரீட்சை ஆகிய பரீட்சைகள் நடாத்தப் படவில்லை என்று தெரிவிக்கப்படுகின்றது.

யாழ் மாவட்டத்திலுள்ள அரசினர் வைத்தியசாலைகளில் ஆண்.பெண் பரிசாரர்களுக்கு ஏற்பட்டிருக்கும் வெற்றிடங்களை நிரப்புவதற்காக சுகாதார திணைக்களத்தில் கடமையாற்றும் சிற்றூழியர் மத்தியிலிருந்து மேற்படி 48 பேரும் பரிசாரகர் பயிற்சிக்கு தெரிவு செய்யப்பட்டிருந்தனர்.

இவர்களில் 24பேர் பெண்க

(5-ம் பக்கம் பார்க்க)

# சம்பள உயர்வு கிடைத்ததும் ஆசிரியர்கள் ஓய்வுபெறக் கூடாது

(வட்டுக்கோட்டை)

''இன்றைய ஆசிரியர்களது சம்பளம் ஏனைய சேவையாளர்களை விட மதிப்படையச்செய்துள்ளது. இந்தச் சம்பளம் எப்படியும் ஜூன் மாதத்திற்குள் சகல ஆசியர்களுக்கும் கிடைக்குமென நம்புகின்றேன். இப் புதிய சம்பளத்தைப் பெற்றதும சிலர் ஓய்வு பெற இருபபதாக அறிகின்றேன். அறுபது வயதுக்கு உட்பட்டவர்கள் ஓய்வுபெற்றால் எதிர்வரும் தை மாதத்தில் கிடைக்கவிருக்கும் அரசாங்க ஊழியர்களுக்கான சம்பள உயர்வைப் பெறமுடியாத நிலை உருவாகும். எனவே அரசாங்க ஊழியர்களுக்கான பொதுச் சம்பள உயர்வைப் பெற்றுக்கொள்ளும் வரை ஓய்வு பெருதீர்கள்.''

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி குமாரசுவாமி மண்டபத்தில் அண்மையில் நடைபெற்ற இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்க யாழ். மாவட்ட நிர்வாகிகளுக்கான விசேட கூட்டத்தில் உரையாற்றிய இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்க, பொதுச்செயலாளர் திரு. த. மகாசிவம் மேற்கண்டவாறு கூறினர்.

இக் கூட்டத்தில் யாழ். மாவட்டததில் உள்ள கிளைச் சங்கங்களது தலைவர்கள்' செயலாளர்கள், பொருளாளர்கள் கலந்துகொண்டனர்.

இக்கூட்டத்தில் திரு. மகாசிவம் தொடர்ந்து உரையாற்றும்போது; அன்றைய ஆசிரியர்கள் சிலர் கார்களிலும், மாட்டு வண்டிகளிலும் பாடசாலைகளுக்கு வந்து போனர்கள். அன்று அவர்களுக்கு வழங்கப்பட்ட சம்பளம் சிறப்பாகச் சீவிப்பதற்கு போதுமானதாகக் காணப்பட்டது. இன்றைய சம்பளம் அவர்களோடு ஒப்பிடும்போது போதுமானதா? இவைகளையெல்லாம் ஆராய்ந்துதான் புதிய சம்பளம் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

ஆசிரியர்கள் ஆசிரிய சேவையில் உள்வாங்கப்பட்டு புதிய சம்பளம் வழங்கப்படுவதைக் கண்டு ஏனைய உத்தியோகத்தர்களுக்கு மனத்தாங்கல் ஏற்படுவதை உணர முடிகிறது. உண்மையிலேயே இந்தச் சம்பளம் ஆசிரியர்களுக்கு முன்னரே வழங்கப்பட்டிருத்தல் வேண்டும் தற்போது ஆசிரியர் சங்கங்கள் இணைந்து கேட்டுக்கொண்டதற்கமையவே இப்புதிய சம்பளம் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

இச்சம்பளத்தைப் பெற்றுக்கொண்டதும் இளைப்பாற நினைப்பது தவருனது. சகல அரச ஊழியர்களுக்கும் எதிர்வரும் தை மாதம் உயர்த்தப்படவுள்ள சம்பளம் ஆசிரியர்களுக்கு கிடைக்கும். நீண்ட காலசேவையுடைய ஆசிரியர்களுக்கு நல்ல எதிர்காலமுண்டு. எனவே சகலவற்றையும் சிந்தித்து இளைப்பாற முயற்சியுங்கள்.

இன்றைய யுத்த காலத்தில் வவுனியாவில் அறுபத்தைந்து புதிய பாடசாலைகள் ஆரம்பிக்கப் பட்டுள்ளன. ஆனல் யாழ். மாவட்டத்திலே அவை குறைக்கப்பட்டு வருகின்றன. அங்கே கூட்டுகிருர்கள். இங்கே குறைக்கிருர்கள்; இது நீதியானதா?

யாழ். மாவட்டத்தில் 3 வலயங்களாக பிரிக்கப்பட்டவுள்ளது இது 6 வலயங்களாகப் பிரிக்கப்பட வேண்டும். திருகோணமலையிலும் மட்டக்களப்பிலும் மும் மூன்று வலயங்களானல் யாழ். மாவட்டத்தில் 3 வலயம் போதுமா? என்ருர். - 139-சி

## குறைந்த

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

மப்புற மக்களுக்கு மானிய அடிப்படையிலான உதவித் திட்டமும். நாலாயிரம் ரூபா வரை மாதவருமானமுடையவர்களுக்கு இருபதாயிரம் ரூபா வரையான கடனுதவியும் மேற்படி திட்டங்களின் மூலம் வழங்கப்படும்.

இதைவிட, மாநகர, நகரசபை பகுதிகளில் ஆயிரம் ரூபாவுக்கு குறைந்த மாதவருமானமுடையவர்களுக்கு மானியஉதவியும், ஐயாயிரம் ரூபா வரையான வருமானமுடையர்களுக்கு இருபதாயிரம் ரூபா வரையான கடனும் வழங்கப்படலாம். இக்கடன்கள் பதினைந்து சதவீத வட்டியில் வழங்கப்படுமெனத் தெரிய வருகிறது. 109

## யாழ். கடல்

(3ம் பக்கத் தொடர்ச்சி)

டுள்ளனர்.

கடலில் மீன் பிடித்துக் கொண்டிருந்த மீனவர்கள் மூவரும் கண்கள் கட்டப்பட்ட நிலையில் தேச விரோதிகளால் மண்டைதீவு முகாமிற்கு அழைததுச் செல்லப்பட்டு அங்கு மிகவும் மோசமாகத் தாக்கப்பட்டுள்ளனர்.

கடற்ருெழிலில் இம்மீனவர்களை ஈடுபடவேண்டாமென எச்சரிக்கப்பட்டபின் இவர்கள் விடுவிக்கய்பட்டனர். -ரி

## பரிசாரர்கள்

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

ளாவார்கள் இவர்களுக்கு கடந்த டிசம்பர் மாதம தொடக்கம் பெப்ரவரி மாதம் வரை மூன்று மாத கால பயிற்சி யாழ் அரசினர் வைத்தியசாலையில் வழங்கப்பட்டிருந்தது. இருமாதகாலமாகியும் இப் பரீட்சையை திணைக்களம் நடாத்தாதினல் இவர்கள் கவலையடைந்துள்ளனர். 72

## ஷெல் தாக்கு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இடங்களில் தமது உறவினர் வீடுகளில் தஞ்சமடைந்துள்ளனர்.

மேற்படி ஷெல் தாக்குதலினல் அச்சுவேலியில் ஒரு வீடு சேதத்திற்குள்ளாகியதும் இங்கு குறிப்பிடத்தக்கது, க-இ51-160-166

## மீனவர்கள் மீது

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இச்சம்பவம் நேற்று முன்தினம் மாலை 4.15 மணியளவில் இடம் பெற்றது.

வெற்றிலைக் கேணியிலிருந்து காங்கேசன்துறையை நோக்கி வந்த கடற்படையினரே மீனவர் மீது பீரங்கித் தாக்குதலை மேற்கொண்டனர்.

இதனல், வல்வெட்டித்துறை ஆதி கோவிலடியைச் சேர்ந்தவர்களான நான்கு பெண்பிள்ளைகளின் தந்தையான அப்புலிங்கம் தேவலிங்கம் (வயது 31] ஒருபிள்ளையின் தந்தையான சுப்பிரமணியம் லோகிதன் [வயது 25] திருமணமாகி இருமாதமாகிய இளைஞன் இராச மாணிக்கம் கண்ணன் [வயது 22) ஆகியோரே கடற்படைத்தாக்குதலில் காணமல் போனவர்களாவர்.

இவர்களது சடலங்களைத் தேடும் பொருட்டு துரித நடவடிக்கைகளை வேறு மீனவர்கள் மேற்கொண்டபோது, தாக்குதல் நடாத்திய கடற்படையினர் தமது விசைப் படகுடன் சம்பவம் நடந்த நேரம் முதல் நேற்று ந. பகல் வரை அவ்விடத்தில் தரித்து நின்றுள்ளனர்.

நேற்று நண் பகல் ஒருமணியளவில் கடற்படையினர் காங்கேசன்துறையை நோக்கிப் புறப்பட்டதும் மீனவர்களினல் கடலில்தேடுதல் ஆரம்பிக்கப்பட்டது. அப்பொழுது அவர்கள் கொண்டு சென்ற இயந்திரப்படகில் பொருத்தப்பட்டிருந்த கொடிச் சீலை மட்டும். துவாரங்கள் ஏற்பட்ட நிலையில் கடலிலிருந்து மீட்கப்பட்டது

சடலத்தை தேடும் பணி மிகவும் துரிதகாகநடைபெற்று வருகின்றது. (160-51)

## இன்று நாவுக்கரசர் குருபூசை:

# துன்பம் வரும்போது இறைவனை நாடுவோம்

சமயகுரவர் நால்வருள் ஒருவர் திருநாவுக்கரசர். இவருக்கும் பிற மூவருக்கும் குருபூசை நடாத்தி வழிபடவேண்டியது சைவ மக்கள் கடமைகும்,

குருவை வணங்குவது ஒரு கடமை. தமக்கு நன்மை செய்பவரை நன்றியுடன் மதிப்பது ஒரு கடமை. இந்த இரு கடமைகளுக்காகவும் சைவ மக்கள் திருநாவுக்கரசரை வழிபடவேண்டியவராவர்.

கூற்ருயினவாறு- சொற்றுணை வேதியன் என்னும் தேவாரங்களைப் பாடி வணங்கும் ஒவ்வொரு சமயிக்கும் திருநாவுக்கரசரை வழிபடும் கடமையுண்டு.

திருநாவுக்கரசர் தமக்கு அரசினல் துன்பம் வந்த போது இறை வணக்கத்துடன் பதருமல் இருந்து அருள்பெற்ருர். கல்லுடன் கட்டி கடலில் விட்ட போது திருவைலெழுத்தை ஓதினர். இதே போல நாமும் பெருந் துன்பம் வரும்போது கலங்காது வழிபடவேண்டும் என்பதற்குத் தாமே மூன்மாதிரியாக வாழ்ந்துள்ளார். இவரைப் பின்பற்றித் துன்பத்திலும் கலங்காது வணங்கினல் இறையருள் உடனடியாக நம்மைக் காக்கும்?

தீயவர்களின் சேர்க்கையால் பல்லவ மன்னன் நாவுக்கரசரைத் துன்புறுத்த நினைத்தான் இதனை அறிந்தவுடன் 'நாமார்க்கும் குடியல்லோம்' என்று வீரம் பேசினர் நாவுக்கரசர். இறையருளால்- இறைவன் துணையைத் தெளிவாக உணர்தலால் மனத்துணிவும் வீரமும் சுலபமாக உணடாகும். வீரமுடையவராக இருப்பதற்கும் இறைநம்பிக்கை-இறை அனுபவம் தேவை என்பதை நாவுக்கரசர் வாழ்விலிருந்து நாம் பெற்றுக்கொள்ளவேண்டும்.

நாவுக்கரசர் ஒருமுறை பழயாறை என்ற ஊருக்குச் சென்ருர். அங்கு உள்ள சைவ ஆலயத்தை சமணர் மறைத்திருப்பதை அறிந்தார். உடனே ''சிவனே சமணர் சூழ்ச்சியை ஒழித்து உமது காட்சியை வழங்கவேண்டும்'' என்று கூறி உண்ணவிரதமிருந்தார். உடனே சிவபெருமான் அந்த நாட்டு மன்னனுக்கு கனவின் மூலம் உணர்த்தினர். மன்னன் ஆலயத்தை வெளிப்படுத்தினர்.

இப்படிப் பல வழிகளில் நமக்கு வழி காட்டுகின்ற அப்பர் சுவாமிகளை வணங்கி அவர் வாக்கிலிருந்தும் வாழ்விலிருந்தும் நன்மையடைவோம்.

—தி. பொ.

# 9,500 பரல் ம.எண்ணெய் உணவுப் பொருட்களுடன்

## 4 கப்பல்கள் வருகின்றன

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்துக்குத் தேவையான ஒரு தொகுதி தார் மற்றும் 9,500 பரல் மண்ணெண்ணையை ஏற்றிக் கொண்டு மாகோ கடபல் பருத்தித்துறைத் துறைமுகம் நோக்கி நேற்று முனதினம் புறப்பட்டது. இக்கபபல் இன்று காலை பருத்தித்துறைத் துறைமுகம் வந்து சேரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இதேவேளையில் தற்பொழுது கொழும்புத் துறைமுகததில் யாழ். மாவட்டதிற்கு வேண்டிய அத்தியாவசிப் பொருட்களை ஏற்றிக்கொண்டிருக்கும் லங்கா முடித்த கப்பல் வெகு விரைவில் பருத்தித்துறைத் துறைமுகம் வந்து சேரும் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது.

இக்கப்பலில் அரிசி, பால்மா, சீனி, பருப்பு உட்பட 3 000 மெற்றிக் தொன் பொருட்கள எடுத்து வரப்படுவதாக யாழ். அரச அதிபர் க. பொன்னம்பலம் தெரிவித்தார்.

யாழ். மாவட்டத்தில் தனியார்துறைக்கு, கொழும்புத் துறைமுகத்தில் கோமாரி கப்பலில் ஏற்றப்பட்ட பொருட்களில், அண்மையில் தடை செய்யப்பட்ட பொருட்களான சீமெந்து உட்படப் பல பொருட்கள் கப்பலில் இருந்து இறக்கி முடிந்ததும் மற்றைய பொருட்களுடன் கொழுமபில் இருந்து இன்று அது புறப்படவுள்ளது.

இக்கப்பல் நாளை மறுதினம் பருத்தித்துறை வந்து சேருமென எதிர்பாக்கப்படுகிற.

திருகோணமலையிலிருந்து ஹபறண கப்பல் யாழ். மாவட்டத்துக்கு வேண்டிய 2000 மெ. தொன் மாவை ஏற்றிக் கொண்டு இறு அல்லது நாளை புறப்படவுள்ளது.

இக்கப்பல் இம்மாதம் 28-ந் திகதி பருத்தித்துறை துறைமுகத்தை வந்து சேருமென எதிர் பார்க்கப்படுகிறது என்றும் அவர் மேலும் தெரிவித்தார். 192 இ


## சந்தா விநியோகம்

''ஈழநாடு'' பத்திரிகை மாதாந்தம் உங்கள் வீடுகளுக்கு டிலிவரிக்கான கட்டணம் எதுவுமின்றி விநியோகம் செய்ய ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. மே மாதம் முதலாம் திகதி முதல் அதிகாலை 5-00 மணிக்கு முன் உங்கள் வீடுகளுக்கு விநியோகம் செய்யலாம்.

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:
விநியோக முகாமையாளர்,
ஈழநாடு லிமிட்டெட். யாழ்ப்பாணம்.

(ஏ-4890)



நாடக ஆர்வலர்களிற்கு
ஓர் அரிய வாய்ப்பு

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம்

தயாரித்து வழங்கும்

திரு. க. சிதம்பரநாதனின்

## நாமிருக்கும் நாடு நமது

ஏற்கனவே பளையில் 25-04-95லும், கொடிகாமத்தில் 27-04-95லும், சாவகச்சேரியில் 29-04-95லும் மேடையேறவிருந்த இந் நாடகம் தவிர்க்கமுடியாத காரணத்தால் பினவரும் திகதிக்கு பின்போடப்பட்டுள்ளது.

12-05-95ம் திகதி - கொடிகாமம். திருநாவுக்கரசு மகா வித்தியாலயம்

13-05-95ம் திகதி - பளை மகாவித்தியாலயம்

14-05-95ம் திகதி - சாவகச்சேரி இந்துக் கல்லூரி

காணத் தவருதீர்கள்!

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம்

(ஏ-4891)

# கிழக்குப் பகுதி நிலைமை குறித்து அரசு மீது ஐ.தே.க. குற்றச்சாட்டு

[கொழும்பு)

ஐ.தே.க பதவியிலிருந்த போது கிழக்குப்பகுதியில் அமைதியான சூழ்நிலை நிலவியது எனினும் இந்த அரசு பதவிக்கு வந்ததும இந்த அமைதி சூழ்நிலை அழிந்து போயிற்று கிழக்கில் இப்போது மீண்டும் புலிகளின் ஆதிக்கம் உறுதியடைந்து வருகின்றது.

ஐ. தே. கட்சி இவ்வாறு அரசாங்கத்தின் மீது குற்றஞ் சுமத்தியுள்ளது

கிழக்கில் அரசு மீண்டும் பாதுகாப்பை உறுதிப்படுத்த வேண்டும் இதற்கான நடவடிக்கைகளை அரசு உறுதியுடன் எடுக்கவேண்டுமெனவும் ஐ. தே. க கேட்டுக் கொண்டுள்ளது.

ஐ.தே க. கட்சியின் பாதுகாப்பு உபகுழுவின் தலைவர் பி. தயாரட்ன வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றில் இந்த விபரம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த புதன்கிழமையின் பிறகு இதுவரை நடந்த மோதல்களில் கிழக்குப்பகுதியில் பாதுகாப்புப் படையைச் சேர்ந்த 47 பேர் பலியாகியுள்ளனர் என அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இ

# அரசு மீண்டும் அமுல் செய்த பொருளாதாரத் தடை தமிழ் மக்களைப் பாதித்துவிட்டது

சுரேஷ் பிரேமச்சந்திரன்

[கொழும்பு]

"ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்கா தமிழ் மக்கள் மீது மீண்டும் பொருளாதாரத் தடையை கொண்டுவந்த செயல் தமிழ் மக்கள் அவர்மீது கொண்டுள்ள நம்பிக்கையை பாதிக்கச் செய்துவிட்டது."

இவ்வாறு ஈ. பி. ஆர் எல். எப் பிரமுகர் சுரேஷ் பிரேமச்சந்திரன் பி. பி. ஸிக்கு வழங்கிய பேட்டியில் தெரிவித்தார். அவர் தமது பேட்டியில் மேலும் தெரிவித்ததாவது;

பொருளாதாரத் தடை தமிழ்மக்களை முழுமையாகப் பாதிக்கக்கூடிய ஒரு செயல் என்பது ஜனாதிபதிக்கு நன்கு தெரியும்.

குறிப்பாக கடல்வலயத் தடைச்சட்டம் மக்களின் ஜீவனோபாயத்தோடு சம்பந்தப்பட்டது மக்களின் வயிற்றில் அடிக்கும் ஒரு செயல் அது.

ஆகவே தமிழ் மக்கள் மீது பொருளாதாரத் தடையை இந்த அரசு மீண்டும் கொண்டுவந்ததினால் மக்கள் பெரிதும் பாதிப்புக்குள்ளாகியுள்ளார்கள் என்பதை இந்த அரசு உணர வேண்டும்.

அத்துடன் இவ்வாறான தடைகளினால் தமிழ் மக்களை வென்றெடுக்க முடியாது என்பதையும சந்திரிகா அரசு உணர வேண்டும்.

திருமதி சந்திரிகா வினால் இந்த நாட்டில் நிரந்தர சமாதானத்தைக் கொண்டு வரமுடியும் என்ற நம்பிக்கையிலேயே பெருமளவில் மக்கள் வாக்களித்தார்கள் மீண்டும ஒருபொருளாதாரத்தடையை இந்த அரசு கொண்டுவரும் என்று மக்கள் ஒருபோதும் நினைக்கவில்லை.

கடந்த அரசாங்கம்போல், இந்த அரசாங்கமும் நடவடிக்கைகளில் இறங்கும் பட்சத்தில் தமிழ்மக்களுக்கு இந்த அரசாங்கத்திலும் இருக்கும் நம்பிக்கையும் அற்றுப்போய் விடும் என்பதை அவர் உணர வேண்டும்.

அரசுக்கும் - விடுதலைப்புலிகளுக்குமிடையில் தற்போது ஏற்பட்டுள்ள துர்ப்பாக்கிய நிலை தொடராமல் மீண்டும் சம்பந்தப்பட்டவர்கள் சமாதானப் பேச்சுவார்த்தைகளுக்குத் திரும்பவேண்டும்.

அரசாங்கமும் பேச்சுவார்த்தைகளில் உண்மையான நாட்டம் கொண்டு, விடுதலைப்புலிகளை எவ்வாறாகிலும் பேச்சுவார்த்தைக்குக்கொண்டுவந்து இந்த நாட்டில் நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்தவேண்டும் என்பதே எனது விருப்பம் என்று கூறினார். (வி-இ)

# பாரிஸ் மாநாட்டிற்கு ஜனாதிபதி பயணம்

(கொழும்பு)

பிரான்ஸ் தலைநகர் பாரிஸில் நடைபெறும் இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் மாநாட்டில் கலந்து கொள்ளும்முகமாக ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவும், அவரது குழுவினரும் நேற்று இரவு பாரிஸ் பயணமாகினர்.

நிதி, திட்டமிடல் அமைச்சின் செயலர் ஏ. எஸ். ஜெயவர்த்தன, ஜனாதிபதியின் பொருளாதார ஆலோசகர் லால் ஜெயவர்தன, வெளிநாட்டு வளங்கள் பணிப்பாளர் நாயகம் லால் செனிவிரத்ன, தேசியத் திட்டமிடல் பணிப்பாளர் நாயகம் எஸ். கே சருணரத்ன ஆகியோரும் ஜனாதிபதியுடன் பாரிஸ் சென்றுள்ளனர்.

எதிர்வரும் 27, 28ம் திகதிகளில் நடைபெறவுள்ள இம் மாநாட்டில், வடக்கு-கிழக்கில் மேற்கொள்ளப்பட்டு வரும் புனர்வாழ்வு, புனரமைப்பு நடவடிக்கைகள், அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்படும் சமாதான முயற்சிகள் பற்றி ஜனாதிபதி சந்திரிகா விரிவாக எடுத்து விளக்குவார் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

85 கோடி அமெரிக்க டொலர்கள் இவ்வாண்டு இலங்கைக்கு இம்மாநாட்டின் மூலம் கிடைக்கவிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. க இ

## யுத்தத்தை நிறுத்த கோரிக்கை

(கொழும்பு)

நாட்டில் தொடரும் யுத்தத்தை நிறுத்தி சமாதானத்தை ஏற்படுத்த அர்த்த புஷ்டியான நடவடிக்கை எடுக்கும்படி நவசமசமாஜக்கட்சி ஜனாதிபதி சந்திரிகாவிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

வீரகேசரி பத்திரிகை அதன் நேற்றைய பதிப்பில் இந்த செய்தியை வெளியிட்டுள்ளது. க-இ

# காயமடைந்த படையினரை ஜனாதிபதி பார்வையிட்டார்

[கொழும்பு]

திருமலை கப்பல் தகர்ப்புச் சம்பவத்திலும், மட்டக்களப்பு கட்டுமுறிவு முகாம் தகர்ப்பிலும் படுகாயமடைந்த படையினரை, ஜனாதிபதி திருமதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க பார்வையிட்டார்

ஜனாதிபதி சந்திரிகா, நேற்றுக் காலை இராணுவ ஆஸ்பத்திரிக்குச் சென்று காயமடைந்த படையினரைப் பார்வையிட்டு ஆறுதல் கூறினார். இவருடன் பாதுகாப்புப் பிரதி அமைச்சர் கேணல் அனுருத்த ரத்வத்த, பாதுகாபபுச் செயலாளர் சந்திரானந்த டி சில்வா உட்படப் படை அதிகாரிகளும் கூடச் சென்றிருந்தனர்.

மேற்படி இரு தாக்குதல்களிலும் காயமடைந்த படையினரைப் பார்ப்பதற்கு அவர்களின் உறவினர்களுக்கு நேற்று முதல் அனுமதி வழங்கப்பட்டதாகத் தெரிவிக்கப் படுகின்றது. வி இ

# 'நரோமா' கப்பல் சேவை இன்று நடைபெறாது

(யாழ்ப்பாணம்)

இன்று 25-ம் திகதி பருத்தித்துறையிலிருந்து திருகோணமலைக்குச் செல்லவிருந்த 'நரோமா' பயணிகள் கப்பல் அடுத்தமாதம் 3ம் திகதியே செல்லுமென அறிவிக்கப்படுகின்றது. எனவே இன்று இக்கப்பலில் பயணம் செய்யப் பதிவு செய்த பயணிகள் 3ம்திகதி காலை 8 மணிக்கு பருத்தித்துறை துறைமுகத்தில் சமுகமளிக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. அத்துடன் 03ம் திகதி பயணம் செய்யும் பிரயாணிகளின் பெயர்ப்பட்டியல் செயலக விளம்பரப் பலகையில் போடப்பட்டுள்ளது.

மே மாதம் முதலாவது கப்பல் சேவையில் பயணம் செய்ய அனுமதிக்கப்பட்ட பயணிகள் இன்றும் 2ஆம் கப்பல் சேவைக்கு அனுமதிக்கப்பட்ட பயணிகள் நாளையும் யாழ் செயலகத்தில் வந்து தங்கள் ஆசனத்தைப் பதிவு செய்து பற்றுச்சீட்டைப் பெற்றுக்கொள்ளுமாறு யாழ்.செயலகம் அறிவித்துள்ளது. இ-162

## கொழும்பில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கைது செய்தார்கள்.

கைது செய்யப்பட்டவர்களுக்கும், விடுதலைப் புலிகளுக்கும் எதுவித தொடர்பும் இல்லை என்று விசாரணையின் போது தெரியவந்த பெரும்பாலான தமிழர்களை தாம் உடனடியாக விடுதலை செய்துவிட்டதாக பொலிஸ் மா அதிபர் பிராங் டி சில்வா தெரிவித்துள்ளார்.

இத்தகைய நடவடிக்கைகளை மேற்கொள்ளும்போது பொதுமக்களுக்கு ஏற்படும் சிரமங்கள் குறித்து பொலிஸ் மா அதிபர் தமது வருத்தத்தையும் தெரிவித்துள்ளார். வி-இ

## புக்காரா. ஹெலி

(1ம் பக்கத் தொடர்ச்சி)

இதேவேளையில் ஆவரங்கால் சிவன்கோவிலை அண்டிய பகுதிகளில் நேற்றுக்காலை 10-30 மணியளவில் ஹெலிகொப்டர் ஒன்று 50 கலிபர் தாக்குதலை சரமாரியாக மேற்கொண்டது.

வல்லைப் பாலத்திற்கருகிலும் ஹெலி கொப்டர் 50 கலிபர் தாக்குதலை மேற்கொண்டது.

மேலும் அளவெட்டிப் பகுதியைச் சூழவுள்ள பகுதிகளில் ஹெலிகொப்டர் தாழப்பறந்து சென்றதையடுத்து, பொது மக்கள் பெரிதும் பதற்றம் அடைந்து காணப்பட்டனர்.

ஆனால் அதிர்ஷ்டவசமாக ஹெலிகொப்டரில் இருந்து தாக்குதல் எதுவும் மேற்கொள்ளப்படவில்லை என்று தெரிவிக்கப்பட்டது. க இ 51 160

## தென்மராட்சியில் புக்காரா நோட்டம்

(சாவகச்சேரி)

தென்மராட்சிப்பகுதியில் புக்காரா குண்டு வீச்சுவிமானம் ஒன்று நேற்று அதிகாலை 5-30 மணியளவில் தென்மராட்சி கடல் ஏரிப் பகுதிகளை பல தடவைகள் வட்டமிட்டு சென்றது. 155

## சமாதானக்

[1ம் பக்கத் தொடர்ச்சி]

அறிக்கை ஒன்றில் குறிப்பிட்டுள்ளதாக ஏ எப். பி செய்திகள் தெரிவிக்கின்றன.

விடுதலைப்புலிகள் தமது அறிக்கையில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:

"சமாதானத்துக்கான கதவுகளை நாம் ஒரேயடியாக மூடிவிடவில்லை. சர்வதேச சமூகம் இலங்கையில் அமைதி பிறக்கவேண்டும் என்று விருப்பம் கொண்டிருப்பதை நாம் உணர்ந்தே உள்ளோம்.

ஆனால் இதேவேளை, இலங்கை அரசு அமைதிப் பேச்சுவார்த்தையின் போது தனது ராணுவத்தைப் பலப்படுத்தும்போது விடுதலைப் புலிகள் இதைப் பொருட்படுத்தக்கூடாது என்று சர்வதேச சமூகம் எப்படி எதிர்பார்க்கமுடியும்?

அரசாங்கம் நாலுகட்டமாக எம்முடன் சமாதானப்பேச்சுக்களை நடாத்தியபோது, முடிவுகள் எடுக்கும் அதிகாரம் கொண்ட அரசியல் தலைவர்கள் எவரையும் அனுப்பிவைக்கவில்லை.

இனப்பிரச்சனைக்கு அர

தீர்வு இருக்கின்றது என்று அரசு சொல்லிச் கொள்கின்றதே தவிர, அதற்கான தீர்வு என்ன என்பதை வெளிப்படையாககூறுவதற்கு அரசு தயங்குகின்றது.

வருங்காலததில் அமைதிக்கான புதிய முன்னெடுப்புக்களை அரசே இனிமேல் முன்வைக்க வேண்டும். இவ்வாறு விடுதலைப்புலிகள் தமது அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளதாக ஏ. எப். பி. செய்திகள் தெரிவிக்கின்றன. வி

## வல்லை வீதியில்

[1ம் பக்கத் தொடர்ச்சி]

இடம்பெற்றது.

புக்காரா விமானம் பலாலிக்கு சென்றதும். கிணற்றிலிருந்து வெளியேறிய லொறி சாரதியும், நடத்துனரும் ஆவரங்கால் பகுதியில் லொறியை கொண்டு சென்று நிறுத்தினர்கள். இ 160

## வீடுகள் சேதம்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

பயன்தரு மரங்களும் வீடும் பலத்த சேதமடைந்தது.

கதிரிப்பாய். வரணன் பகுதியில் பத்திற்கும் மேற்பட்ட ஷெல் தாக்குதல் நடாத்தப்பட்டது

இதனால் பயன்தரு மரங்கள் புகையிலை மற்றும் தோட்டங்கள் சேதமடைந்ததுடன் கால்நடைகள் பலவும் பலியாகிஉள்ளன இ-க-51-160


## தேவை

ஈழநாடு ஸ்தாபனத்திற்கு அனுபவமும், திறமையும் வாய்ந்தவர்களிடம் இருந்து கீழக்காணும் வெற்றிடங்களுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகினறன.

### ஆசிரியர் பகுதி

பத்திரிகைத்துறையில் பட்டம் அல்லது அனுபவம் உடையவர்கள் (ஆங்கிலம், சிங்கள மொழிகளில் தேர்ச்சி பெற்றவர்களுக்கு முன்னுரிமை வழங்கப் படும்.)

### அச்சகப் பகுதி

அச்சுக்கோர்ப்பாளர்கள் (அனுபவம் உடையவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்)

### அச்சு இயந்திர இயக்குநர்கள்

அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப் படும்.

வயது : 40 வருடங்களுக்கு மேற்படலாகாது.
சம்பளம் : தகுதிக்கேற்ப வழங்கப்படும்.

விண்ணப்ப முடிவுத் திகதி : 30-04-95.

★ விண்ணப்பத்துடன் கல்வித் தகைமை, அனுபவம் பற்றிய சான்றிதழ்களின் பிரதிகளும், நற்சான்றுப் பத்திரப் பிரதிகளும் இணைக்கப்படவேண்டும்.

விண்ணப்பம் அனுப்பவேண்டிய முகவரி ;

விளம்பர இல. ஏ-4878,
ஈழநாடு லிமிட்டெட்,
த. பெ. எண் : 49,
யாழ்ப்பாணம்.

(ஏ-4878)


இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதி, 63ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1995ம் ஆண்டு ஏப்பிரல் மாதம் 25-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Registered as a Neaws paper at the General Post office Sri Lanka under Licence number B/1633613.